DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 201/2024
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வின்சன் |
| Father / Husband Name | சூசை |
| Village | ஜானகிபுரம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **03.03.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஜானகிபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்த தாஸ் என்பவர் எனது அக்காவின் கனவர் ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2020 ம் வருடத்தில் ஒரு நாள் அவர் கொளம்பாக்கத்தில் உள்ள கற்பகவினாயகா கல்லூரயில் வேலைக்கு மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தபோது பழம் ஏற்றி செல்லும் வாகனம் அதற்கு பின்னால் வந்த மற்றொரு வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் மேற்படி மருத்துவக் கல்லூரிக்கு சென்று பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் காலில் அடிப்பட்டு இருந்தார். அதற்கு பின்பு நான் அவரை பாரக்க செல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்த சம்மந்தமாக புகார் கொடுக்க காவல் நிலையம் யார் யார் சென்றார்கள் என்றால் பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 4 முதல் 6 வரையானவர்கள் சென்றோமா என்றால் ஆமாம். அப்போது தான் எங்களிடம் கையொப்பம் பெற்று எங்கள் விளாசத்தை கேட்டு எழுதிக்கொண்டார்களா என்றால் ஆமாம். அதற்கு பிறகு எங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தாஸ் என்பவர் உயிருடன் இருந்தபோது தான் நான் மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

வின்சன்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

3/3/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 201/2024

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேஷ் |
| Father / Husband Name | சண்முகம் |
| Village | திருவண்ணாமலை |
| Taluk | கீழ்பென்னாத்தூர் |
| Age | 36 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **03.03.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது குண்ணங்குப்பத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை. கடந்த 2020 ம் வருடம் ஆகஸ்டு மாதம் ஒரு நாள் காவல் நிலையத்தில் இருந்து எனது அண்ணன் சுரேஷ் என்பவர் அவருக்கு எதிரே வந்த வேன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் காவல் நிலையம் வந்து எனது அண்ணனை பிணையில் விடுத்து வீட்டிற்கு அழைத்து சென்றேன். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. வழக்கு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொண்டு செல்வதாக என்னை அழைத்தார்கள் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். வாகன பரிசோதனையை தவிர்த்து வேறு எந்த கேள்வியும் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

S. ராஜேஷ்

**Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.**

3/3/26

Judicial Magistrate No.II
Madurantakam